**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 03.07.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) கோயம்புத்தூர், ஜூலை 2, 2025 அன்று நூற்புழுவியலில் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியை மேம்படுத்தவும், வேளாண் ஆராய்ச்சியில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் (NASC) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம், தோட்டக்கலை பயிர்களில் நூற்புழுக்களைக் கண்டறிதல் மற்றும் மேலாண்மைக்கான செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் இரா.தமிழ்வேந்தன், பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப்பதிவாளர் முனைவர் க.தேவராஜன், நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.விஜயகுமார், பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.சரண்யா, உதவிப் பேராசிரியர் முனைவர் தி.சூரியபிரபா, ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து, வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி, நூற்புழுவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.அனிதா மற்றும் பேராசிரியர் முனைவர் நா.சீனிவாசன் ஆகியோர் நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர்களுடன் தொழில்நுட்ப கலந்துரையாடினர். இதில் AI அடிப்படையிலான கைப்பேசி பயன்பாடுகள் மூலம் கீழ்க்கண்ட ஆராய்ச்சி சிக்கல்களை தீர்ப்பது பற்றி கலந்துரையாடப்பட்டது.

1. நூற்புழுக்களை விரைவாகவும், துல்லியமாகவும் கண்டறிதல்

2. கொய்யாவில் வேர்–முடிச்சு நூற்புழு நோய்த்தொற்றுகளைக் கண்டறிதல் மற்றும்

3. வாழை வேரழுகல் நூற்புழுக்களின் சேத மதிப்பீடு

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் விவசாயிகள் நேரடியாக வயலில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த எளிதான கருவிகளை உருவாக்கிட கணினி அறிவியல் மற்றும் நூற்புழுவியலை ஒன்றிணைக்கிறது. வேளாண்மை மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை இணைப்பதன் மூலம், தீங்கு விளைவிக்கும் நூற்புழுக்களிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த மற்றும் நிலையான வழிகளை உருவாக்க உதவும். ஆராய்ச்சியை மேம்படுத்துதல், கல்வியில் ஒன்றிணைந்து பணியாற்றுதல் மற்றும் வேளாண் இடர்பாடுகளை தீர்க்க டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் இரு நிறுவனங்களின் உறுதிப்பாட்டை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**